**C.C.97/2021**

**Dated: 18.04.2022.**

**PW: 1**

**Name: ஜெயசங்கர்**

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. 2006 முதல் இது நாள் வரை நான் வருமான வரி கணக்கை தாக்கல் செய்துவருகிறேன். வருமானவரி கணக்கில் வருமானம் எந்த வகையில் வந்தது என்பதையும் செலவு போக இருப்பு உள்ளதையும் காட்டவேண்டும் என்றால் சரிதான். நான் என்னுடைய வருமான வரி கணக்கு சம்பந்தமான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். அசோக் என்ற நபரை எனக்கு தெரியாது. நோரீஸ் நடராஜன் என்பவரை எனக்கு தெரியும். கௌதம் என்பவரையும் எனக்கு தெரியும். நோரீஸ் நடராஜன் என்பவர் வத்தலகுண்டில் பள்ளி வைத்து நடத்தி வருகிறார்.மேற்படி நோரீஸ் நடராஜன் மேற்படி தனசேகர் மற்றும் சந்திரசேகர் மூலமாக எனக்கு அறிமுகமாகி பழக்கம்.நான் வட்டிக்கு தான் எதிரிக்கு எனது வீட்டில் வைத்து 07.01.2019 ந்தேதியில் பணத்தை கடன் கொடுத்தேன். அப்போது கௌதம் , கோவில்பட்டியை சேர்ந்த முத்துகுமார் மற்றும் கௌதம் உடன் வந்த அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நபர் ஆகியோர் உடனிருந்தனர். தாவா கடனை என்னுடைய மற்றும் எனது மனைவி சேமிப்பு பணம் மற்றும் எனது நண்பர்களிட்டம் வாங்கிய பணம் ஆகியவற்றை தான் தாவாகடனாக எதிரிக்கு கொடுத்தேன். எனது நண்பர் கோவில்பட்டியை சேர்ந்த முத்துபாண்டியிடமும் ரூபாய் 8,00,000/- மற்றும் சைலஸ் யிடம் ரூபாய் 5,00,000/- மும் பெற்றும் என்னிடமிருந்த ருப்பாய் 7,00,000/- ஆகிய தொகைகளை சேர்ந்து எதிரிக்கு கடன் கொடுத்தேன். தாவாகடனை பெற்றுகொண்டு எதிரி ஒரு புரோ நோட்டு எழுதிகொடுத்தார். மேலும் நான்கு காசோலைகளை கொடுத்தார். புரோநோட்டை 07.01.2019 ல் தேதியிட்டு எழுதிகொடுத்தார். நான்கு காசோலைகளையும் 07.01.2019 ல் எனக்கு கொடுத்தார். காசோலை எண் 298504,-ஐ 07.04.2019 தேதியிட்டு நிரப்பி

கொடுத்தார். மற்ற 3 காசோலைகளையும் 07.07.2019 தேதியிட்டு நிரப்பி கொடுத்தார். காசோலை எண் 298504,–ஐ நான் கோவில்பட்டி பாரத ஸ்டேட் வங்கியில் வசூலுக்கு செலுத்தினேன். மேற்படி காசோலையானது Instrument out dated என்ற காரணத்தினால் திருப்பபட்டது. மற்ற 3 காசோலைகளையும் கனரா வங்கி கோவில்பட்டி கிளையில் வசூலுக்கு செலுத்தினேன். எந்த தேதியில் வசூலுக்கு போட்டேன் என்று ஞாபகம் இல்லை. மேற்படி 3 காசோலைகளும் எந்த தேதியில் திருப்பபட்டது என்று தேதி எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் funds insufficient என்ற காரணத்தினால் திருப்பபட்டது.இது குறித்து எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினார். என்னிடம் காட்டபடும் புகைப்பட நகல் நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள நான்கு காசோலைகளின் புகைப்படம் என்றால் சரியல்ல. மேற்படி புகைப்பட நகலின் அனைத்து காசோலைகளிலும் தொகை ரூபாய் 5,00,000/– என்று காட்டபட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்பட நகல் நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டின் புகைப்பட நகல் என்றால் சரிதான்.அது எ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யபடுகிறது. சாட்சி தானாக முன்வந்து எ.சா.ஆ 1 ஆவணத்தை பார்த்து பின்னிட்டு வருடத்தை 2020 என்பதற்கு பதிலாக 2019 என்று தவறாக சொல்லிவிட்டதாக கூறுகிறார். பு.சா.ஆ 1 ஆவணத்தில் 12 சதவீதம் வட்டி ஆகவும் 3 வது சாட்சியாக முத்துக்குமார் என்பவர் காட்டபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் எ.சா.ஆ 1 ஆவணத்தில் காட்டபடவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ 1 ஆவணத்தில் புரோநோட்டின் 3 வது சாட்சியாக முத்துக்குமார் என்பது 07.01.2020 ல் எழுதபட்டது தான். வத்தலக்குண்டுவை சேர்ந்த மேற்படி நோரீஸ் நடராஜன் என்பவர் முத்துபாண்டி மற்றும் என் மீது பண மோசடி சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நோரீஸ் நடராஜன் எனக்கு பணம் தரவேண்டியது இருந்தது அதை நான் கேட்க சென்றபோது பணம்கேட்டு மிரட்டியதாக தான் என்மீது புகார் கொடுத்துள்ளார் அது பொய்யான புகார் ஆகும். பு.சா.ஆ 10, சட்ட அறிவிப்பிலோ அல்லது எனது முதல் விசாரணையிலோ எந்த

இடத்திலும் புரோநோட்டிலோ தாவா காசோலைகளிலோ எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார் என்ற வாசகம் குறிப்பிட்டு சொல்லபடவில்லை என்றால் சரிதான். அரசு ஊழியர் வட்டிக்கு பணம் கடன் கொடுக்க கூடாது என்று தமிழ்நாடு அரசு ஊழியர் நன்னடத்தை விதியில் குறிப்பிட பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பின் சங்கதிகள் எனக்கு தெரியும். வழக்கு காசோலைகளில் மாதம் திருத்தபட்டுள்ளது என்று எதிரி தனது பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் பு.சா.ஆ 8 ஆவணமான காசோலையில் எண் 1 ஆனது 4 ஆக திருத்தபட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டபடும் பு.சா.ஆ 2, பு.சா.ஆ 3 மற்றும் பு.,சா.ஆ 4 ஆவணங்களான காசோலைகளில் உள்ள தேதியில் மாதம் 1 ஆனது 7 ஆக திருத்தபட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா காசோலைகளை எதிரி தான் எழுதிகொடுத்தார். எதிரிக்கு தாவாகடனில் ரு.18,00,000/த்தை ரொக்கமாகவும் ரு. 2,00,000/–த்தை வங்கியின் மூலமாகவும் கொடுத்துள்ளேன். எந்த வங்கி மூலம் ரூபாய்.2,00,000/–கொடுத்தேன் என்றால் பாரத ஸ்டேட் வங்கி ஒட்டப்பிடாரம் கிளையின் மூலம் கொடுத்தேன். பாரத ஸ்டேட் வங்கி ஒட்டப்பிடாரம் கிளையில் வெள்ளைசாமி என்கிற சக்தி என்பவரின் மூலமாக அவரது துணைவியார் வங்கி கணக்கிலிருந்து அனுப்பினேன். எதிரிக்கு நான் எந்ததொகையும் கடனாக கொடுக்கவில்லை என்றாலும், நானும் மேற்படி நோரீஸ் நடராஜனும் மற்ற என் நண்பர்களும் சேர்ந்து நோரீஸ் நடராஜன் வைத்துள்ள டிரஸ்டில் பணம் செலுத்தினால் இருமடங்காக பணம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் செக்யூரிட்டியாக வாங்கிய காசோலைகளை திருத்தம் செய்து காலாவதியான காசோலையை வழக்கில் எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா காசோலைகளை நிபுணர் ஆய்வறிக்கை அனுப்ப எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை. தாவா காசோலைகளில் ஒன்று

காலாவதியாகிவிட்டது என்ற காரணத்தினால் திருப்பபட்டுள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:–</u> இல்லை

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/–Thiru.S.P.Parvadhraj Arumugam,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.